III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE
O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 03-01-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Manova | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**<u>முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தின் அசல் தாய் பத்திரங்கள் கொடுத்தது பற்றி எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு தாய் பத்திரங்கள் கொடுக்கப்பட்ட விவரத்தை எனது இரண்டு வழக்கறிஞர் அறிவிப்புகளில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு விவரங்கள் எனது வழக்குரையிலும் அறிவிப்புகளிலும் நான் சொல்லாததற்கான காரணம் அசல் தாய் பத்திரங்கள் அவர்களிடமே இல்லை என்றும் ஆதலால் என்னிடம் கொடுத்திருப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிலாலுக்கு கொடுத்த கடனுறுதி சீட்டு பற்றிய விவரத்தை எனது இரு வழக்கறிஞர் அறிவிப்புகளில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிலால் என்னிடமிருந்து வாங்கிய கடனை வருடத்திற்கு 12 சதவீத வட்டியுடன் திருப்பி தரவேண்டி ஒப்பந்தம் ஆனது. அந்த வட்டி விவரம் கடனுறுதி சீட்டில் உள்ளதா என்றால் இல்லை. வா.த.,சா.10 ல் வட்டி என்ற இடம் காலியாக உள்ளது. வா.த,சா.10 பற்றி முதல் பிரதிவாதி கிறிஸ்டிபெலுக்கு தெரியாது. இரண்டாம் பிரதிவாதி ஜான் வெஸ்லிக்கு தெரியும். ஜான் வெஸ்லிக்கு கொடுக்கப்பட்ட நாளிலேயே விவரம் தெரியும். இந்த விவரங்களை நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கடன் கொடுத்தது தெரியாது என்று ஜான் வெஸ்லி தனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் அதை அவர் பொய்யாக சொல்கிறார். இவ்வழக்கிற்காக நான் பிலாலுக்கு கடன் கொடுத்தாக பொய்யாக ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்று ஜான் வெஸ்லி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.த.சா.10 காலாவதியாகிவிட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 08.04.2011 அன்று 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 4 வது பிரதிவாதிக்கு மற்றொரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்த

விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 10.02.2011ல் ஏற்கனவே 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் 3 வது பிரதிவாதி மூலம் போடப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை மறைத்து 02.03.2011 அன்று 3 வது பிரதிவாதி மூலம் நான் ஒரு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதால் தான் 08.04.2011 அன்று 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 4 வது பிரதிவாதிக்கு மற்றொரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 08.04.2011 அன்று ஒரு பவர் பத்திரத்தை புதிதாக ஏற்படுத்தினார்கள், அன்றைய தேதியில் பிலால் பெயரில் உள்ள பவர் பத்திரத்தை ரத்து செய்தார்கள், அன்றைய தேதியிலேயே சதீஷ் என்பவதருக்கம் துரைராஜ் என்பவருக்கும் புதிதாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார்கள், அன்றைய தேதியிலேயே பதிவு செய்யப்படாத ஒப்பந்தத்தை என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு முன்நாளில் ஏற்பட்டதாக என்னிடம் காண்பித்தார்கள். மேலும் என்னையே சொத்தை வாங்குபவரை அழைத்து வரச்சொல்லியும் பாதி தொகையை தன்னிடம் கொடுக்கச்சொல்லியும் துரைராஜ் கூறினார். மேற்கூரிய விவரங்களை என்னிடம் இரண்டாவது ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட 2–3 வாரங்களுக்கு பின்னர் தெரிவித்தார். அப்போது எனக்கு 08.04.2011 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் குறித்து தெரியவந்தது. 08.04.2011 அன்று ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் எனக்கு 2–3 வாரங்களுக்கு பின்னர் தெரியவந்தது என்பது குறித்தான விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன விவரங்களை நான் இரண்டு வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த விவரங்களை நான் சொல்லாததற்கான காரணம் அதுபோன்று இரண்டு ஒப்பந்தம் 08.04.2011ல் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 26.04.2011 அன்று அனுப்பட்ட அறிவிப்பு வா.த.சா.6. 09.05.2011 அன்று அனுப்பட்ட அறிவிப்பு வா.த.சா.7. அந்த இரண்டு அறிவிப்புகளையும் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பியுள்ளேன். வா.த.சா.6 மற்றும் 7ல் 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிகளின் விலாசம் 183 எம்.டி.எச். ரோடு மண்ணூர் பேட்டை, சென்னை–50 என்று குறிப்பிடப்ப்ட்டுள்ளது. அந்த விலாசத்தில் தான் தாவா சொத்து உள்ளது. அந்த சொத்தில் தான் பிரதிவாதிகள் 1 மற்றும் 2 இருந்தார்கள். வா.த.சா.6க்கு இரண்டாம் பிரதிவாதி ஜான் வெஸ்லி பதில் அனுப்பினார். அது வா.த,சா.8. வா.த.சா.8ல் சஜான் வெஸ்லி, எனது வா.த.,சா.6 வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை மறுத்தும் தனது வழக்கறிஞர் மூலம் பின்னர் பதில் அனுப்ப உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 3 வது மற்றும் 4 வது பிரதிவாதிகளுக்கு வா.த,சா.6ஐ அனுப்பியதற்கான ரசீதுகளையோ அல்லது அதை அவர்கள்

பெற்றுக்கொண்டதற்கான அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.த.சா.8 ன் படி இரண்டாம் பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் ஜூன் 2011 ல் பதில் அனுப்ப உள்ளதாக தெரிவித்துள்ள நிலையில் நான் ஏன் வா.த.சா.7 ன் படி 09.05.2011 அன்று 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப வேண்டிய காரணம் என்னவென்றால் நான் வா.த.சா.7 ஐ வேறொரு வழக்கறிஞர் மூலம் அவர்களுக்கு அனுப்பினேன்.

(முதலாவது பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)